**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2021**

**D021 இலக்கணம்–3 (பொருள்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பொருள் என்பது இலக்கணத்தில் எதனைக் குறிக்கும்?
2. இருவகைக் கைகோள்கள் எவை?
3. கற்பின் இரு வகைகள் யாவை?
4. பகற்குறி இடையீடு எத்தனை வகைப்படும்?
5. வரைவிற்குரிய இருவகைக் கிளவித் தொகைகள் யாவை?
6. நாற்கவிராச நம்பி குறிப்பிடும் கற்பிற்குரிய கிளவித்தொகைகள் எத்தனை?
7. களவில் கூற்றிற்கு உரியோர் யாவர்?
8. ஐந்திணை என்பன யாவை?
9. ஆநிரையைக் கவர்வோர் எந்தப் பூவைச் சூடுவர்?
10. கரந்தையை எதனது புறம் எனலாம்?
11. மகளிரொடு தொடர்புடைய காஞ்சித் துறைகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.
12. உழிஞைப் போரின் வேறு பெயர் என்ன?
13. வாகை என்ற பெயர் ஏற்படக் காரணம் என்ன?
14. பரிசில் விடை என்றால் என்ன?
15. மண்ணுமங்கலம் என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. அகப்பொருள் – அகம் என்பதன் பொருள் யாது?
2. கற்பில் நிகழும் பிரிவின் வகைகள் யாவை?
3. அறத்தொடு நிற்றலின் இரு வகைகளை விவரிக்க.
4. ஒழிபியல் விளக்கம் – தருக.
5. கவர்ந்த ஆநிரையை யார் யாருக்குப் பகுத்துக் கொடுத்தல் மரபு?
6. நொச்சித் திணைக்குறிய துறைகள் யாவை?
7. மறக்கள வழி என்றால் என்ன? அத்தன்மையில் அமைந்த இலக்கியம் எது?
8. நலம் பாராட்டல் என்ற துறைக்கான வெண்பாவின் பொருள் யாது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) அகம் – பொருளும் பொருத்தமும் குறித்து கட்டுரை எழுதுக.

   (அல்லது)

   (ஆ) இயற்கைப் புணர்ச்சி குறித்து கட்டுரை தருக.

2. (அ) உடன்போக்கு இடையீடு குறித்து எழுதுக.

   (அல்லது)

   (ஆ) போரும் உலக இயற்கையும் குறித்து எழுது.

3. (அ) கரந்தைத் திணையையும் துறைகளையும் விளக்கி எழுதுக.

   (அல்லது)

   (ஆ) போர்க்களத்து ஆடல்கள், கொண்டாடல்கள் குறித்து கட்டுரை எழுதுக.

***